Tamil

2007 /08க்கான பிறெண்ட் அடல்ட் அண்ட் கொம்மியூனிட்டி எடுகேசன் சேர்வீஸ் என்பதன் நூற்பத்திரத்துக்கும் (புறோசர்) பாடநெறிப் பட்டியல்களுக்கும் உங்களை வரவேற்கிறோம்.

BACES என்பதில் மக்கள் படிக்க விரும்புவதற்குப் பல காரணங்கள் உள்ளன. புதிய திறமைகளைக் கற்றுக்கொள்வதற்காக, தமது உள்ளங்களை விரிவுபடுத்திக்கொள்வதற்காக, வெவ்வேறு மக்களைச் சந்திப்பதற்காகப் பலர் வருகிறார்கள். அதே நேரத்தில் ஏனையோர் தொழில் ஒன்றைத் தேடிக்கொள்வதற்காக, தமது பிள்ளைகளின் கற்றல் தொடர்பாக அவர்களுக்கு உதவுவதற்காக, தமது தொழில் வாய்ப்புக்களை முன்னேற்றுவதற்காக, அல்லது உயர்ந்த மட்டத்திலான தகுதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வருகிறார்கள். .

நீங்கள் கற்க விரும்புவதற்கான நோக்கம் எதுவாக இருந்தாலும், நீங்கள் வந்து பதிவு செய்வதற்கு உங்களை ஊக்குவிக்கும் ஏதாவது ஒன்று உள்ளது என நாங்கள் நம்புகின்றோம்.

இந்த நூற்பத்திரத்தைப் பார்வையிட்டு, பின்வருவன போன்ற பாடங்களில் பலதரப்பட்ட தொழில்சார்ந்த பாடநெறிகளிலும் தனிப்பட்ட அபிவிருத்தியும் தொடர்புகொள்ளல் அபிவிருத்தியும் சம்பந்தமான பாடநெறிகளிலும் கொடுக்கப்படுகின்றவற்றைப் பார்த்துக்கொள்ளவும்:

- கலைகள், கைவேலைகள், ஊடகம், மற்றும் தொடர்புகொள்ளல்.
- வர்த்தக நிர்வாகமும் நிர்வகிப்பும்
- கொம்பியூட்டர் தொடர்பான கல்வி
- குடும்பம் கற்றல் (வமிலி லேர்ணிங்)
- உடற் தகுதியும் விளையாட்டும்
- ஆரோக்கியம், சமூக பாதுகாப்பு, பிள்ளைகளுடன் வேலை செய்தல்
- உபசரிப்பும் பிரயாணமும்
- கணிதம், ஆங்கிலம், மற்றும் ஆங்கில மொழி

உங்களின் படிப்புக்கள் தொடர்பாக, உங்களுக்கு உதவுவதற்கு உங்களுக்கு மேலதிக ஆதரவு தேவைப்பட்டால், பின்வருவன போன்ற எங்களின் ஆதரவுச் சேவைகளை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்:

- எங்களின் நிலையங்கள் சிலவற்றில் பகற்பொழுது பிள்ளை கவனிப்பு வசதிகள்
- குறைக்கப்பட்டதும் சலுகை பெற்றதுமான பாட நெறியும் அங்கீகாரம் பெறுதல் தொடர்பான கட்டணங்களும்.
- படித்தல் திறமைகள், மற்றும் பரீட்சைகளில் சித்தியடைதல் தொடர்பாக உதவி
- மொழி, எழுத்தியல், மற்றும் எண்ணியல் தொடர்பாக மேலதிக உதவி.

எங்களின் பாடநெறிகளில் எது பற்றியும் கூடுதலாக விபரமான தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு, தொலைபேசியில் தொடர்புகொள்ளவும் அல்லது இந்த நூற்பத்திரத்தின் (புறோசர்) பிற்பக்கத்தில் காட்டப்பட்டுள்ள பிரதான நிலையங்களில் எதற்கும் வரவும்.

உங்களைக் காண்பதற்கு நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். நீங்கள் எதனைத் தெரிந்துகொண்டாலும், உங்களின் கற்றல் பூரணமாக வெற்றி பெற நான் உங்களை வாழ்த்துகின்றேன்.

சூ ஹேஸ்டி (Sue Hasty)

சேவையின் தலைவர் (Head of Service)